**5.4.3 அப்படி, இப்படி, எப்படி என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

**அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும் என்பதை அறிந்து, வல்லெழுத்து மிகும்படி கீழ்க்காணும் வாக்கியங்களை நிறைவு செய்க.**

எ.கா.: அப்படி + சொல் = அப்படி**ச்** சொல்
இப்படி + பேசு = இப்படி**ப்** பேசு
எப்படி + கிடைத்தது = எப்படி**க்** கிடைத்தது?

**அப்படி** **இப்படி** **எப்படி**

1. இப்பிரச்சனையை ____________________ களையலாம்?

2. "____________________ தூக்கினால் குழந்தை கைதவறிக் கீழே விழுந்துவிடும்," என அம்மா தம்பியை எச்சரித்தார்.

3. "இன்னொரு முறை ____________________ செய்யாதே," என்று அப்பா தம்பியைக் கண்டித்தார்.

4. ____________________ சமைத்தாலும் சுவையாக இல்லையே என்று சுமதி சலித்துக் கொண்டாள்.

5. "____________________ செய்தால் உன் பிரச்சனை தீரப்போவதில்லை," என்று ஆசிரியர் மாணவனுக்கு அறிவுரை கூறினார்.

LIVEWORKSHEETS